ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1889/48 - 2014 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2014.11.21

*1889/48 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2014 செத்தெம்பர் 01 ஆந் திகதிய 1878/3 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் அப்பிரிவின் கீழான கட்டளையின் மூலம் இறுதியாக திருத்தப்பட்டவாறானதுமான 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் 05 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் அப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையினை இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு திருத்துவதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,<br>
சனாதிபதி,<br>
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,<br>
கொழும்பு 01,<br>
2014, நவெம்பர் 21.

**அட்டவணை**

1. அட்டவணையின் 32 ஆம் விடயத்தினை நீக்குவதன் மூலம் பின்வரும் விடயத்தினை அதற்குப் பதிலிடப்படுகின்றது.

   "32. 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காப்புறுதி கைத்தொழில் (திருத்த) ஒழுங்குவிதியின் 53 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு நீண்டகால மற்றும் பொது காப்புறுதி வியாபாரம் என பிரிப்புக்கமைவாக மற்றும் /அல்லது பிரிப்புடன் தொடர்புடைய பொது கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட ஏதேனும் பங்குச் சான்றிதழ்".

2. அட்டவணையின் 32 ஆம் பிரிவினை உடனடியாக சேர்ப்பதன் மூலம் பின்வரும் புதிய விடயமானது அதனுடன் தேவைப்படுத்தப்படுகின்றது.

   "33. நிதித்துறை ஒருங்கிணைப்பு செயல்முறையின் கீழ் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, சேர்க்கை, கொள்ளல் மற்றும் உள்வாங்கலின் மூலம் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கியியல் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஏதேனும் வங்கி, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வியாபார சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஏதேனும் நிதிக் கம்பனி அல்லது, 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குத்தகை கம்பனியின் ஒருங்கிணைவின் விளைவாக வழங்கப்பட்ட ஏதேனும் பங்குச் சான்றிதழ்".

*12- 678*



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.